# நீங்கள் காசநோயால் இறக்க முடியுமா?



1. காசநோயை குணப்படுத்த மருந்துகள் உள்ளன.

2. ஆனால் காசநோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் தகுந்த சிகிச்சையைப் பெறவில்லை என்றால் அவர் உயிரிழக்க நேரிடலாம்.

3. உலக சுகாதார அமைப்பின் (World Health Organization, WHO) உலகளாவிய காசநோய் அறிக்கையின்படி, 2021 -இல் சுமார் 1.6 மில்லியன் மக்கள் காசநோயால் இறந்துள்ளனர்.



அதிர்ஷ்டவசமாக, சிங்கப்பூரில் காசநோய் தொடர்பான இறப்புகள் குறைவாகும். சிங்கப்பூர் குடியிருப்பாளர்களிடையே காசநோய் இறப்பு விகிதம் 100,000 மக்கள்தொகைக்கு 0.7 என்ற விகிதத்தில் உள்ளது, 2018 -இல் காசநோயால் 28 பேர் இறந்துள்ளனர்.

National Centre for Infectious Diseases

# காசநோயைக் குணப்படுத்த முடியுமா?



1. காசநோயை தகுந்த சிகிச்சையால் குணப்படுத்தமுடியும்.

2. காசநோய் தொற்று உள்ள ஒருவரின் நெருங்கிய தொடர்பில் இருந்ததாக நீங்கள் அடையாளம் காணப்பட்டால், காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு (TBCU) சென்று நீங்கள் பரிசோதனை செய்துகொள்ளவும்.

3. உங்களுக்கு காசநோய் தொற்று அல்லது மறைந்திருக்கும் காசநோயைக் இருப்பதாக பரிசோதனையில் கண்டறியப்பட்டால், தகுந்த சிகிச்சை அளிக்கப்படும்.



4. அரம்பத்திலேயே கண்டறிந்து, ஆற்றல்வாய்ந்த சிகிச்சை அளிப்பதால், கடுமையான சிக்கல்களையும், மரணம் ஏற்படுவதையும் தடுக்கலாம்.

National Centre for Infectious Diseases

# காசநோய்க்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது?



1 காசநோய் சிகிச்சைக்கு வெவ்வேறு மருந்துகளின் கலவையை DOT* -இன் வழி 6-9 மாதங்களுக்கு உட்கொள்ளவேண்டும்.

2 நோயாளிகள் DOT சிகிச்சைக்கு TBCU அல்லது பலதுறை மருந்தகங்களுக்குச் செல்ல வேண்டும்.

#உங்களுக்குத் தெரியுமா?

- **>95% நோயாளிகள்** சரியான சிகிச்சையைப் பின்பற்றும்போது குணமடைகிறார்கள்
- மருந்துகளை சரியாக சாப்பிடாவிட்டால் மருந்து-எதிர்ப்பு வகை காசநோய்க்கு வழிவகுக்கும். இது, நோய்க்கு சிகிச்சையளிப்பதை கடினமாக்குகிறது.
- சிங்கப்பூரர்கள்/சிங்கப்பூர் நிரந்தரவாசிகளுக்கு, சிகிச்சைக்கு **அதிகளவு மானியமளிக்கப்படுகிறது**.

*DOT என்பது நேரடியாக கண்காணிக்கப்படும் சிகிச்சைமுறையாகும். இதில் மருத்துவர், தாதி அல்லது பயிற்சி பெற்ற பணியாளர்களின் கண்காணிப்பின் கீழ் நோயாளிகள் தங்கள் மருந்துகளை எடுத்துக் கொள்கின்றனர்.

National Centre for Infectious Diseases

# மறைந்திருக்கும் காசநோய்க்கு எவ்வாறு சிகிச்சை அளிக்கப்படுகிறது?



1. மறைந்திருக்கும் காசநோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு, எதிர்காலத்தில் காசநோய் தொற்று ஏற்படும் அபாயத்தைக் குறைக்க, தடுப்பு சிகிச்சை*அளிக்கப்படுகிறது

2. தடுப்பு சிகிச்சைக்கு, பின்வருனவற்றில் ஏதேனும் ஒரு காசநோய்-எதிர்ப்பு மருந்தை உட்கொள்ளவேண்டும்.
    - 4 மாதங்களுக்கு ரிஃபாம்பிசின், அல்லது
    - 6 மாதங்களுக்கு ஐசோனியாசிட்

**#உங்களுக்குத் தெரியுமா?**

மறைந்திருக்கும் காசநோய்த் தொற்றை குணமாக்க சிகிச்சை **இலவசமாக** வழங்கப்படுகிறது.

*இந்த சிகிச்சை எதிர்காலத்தில் நோயாளிக்கு காசநோய் வராமல் பாதுகாக்கிறது.



National Centre for Infectious Diseases